# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069035

1. District : மாவட்டம் Tiruppur | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2023 | FIR No : மு.த.அ. எண் 8/2023/AC/TPR | Date: நாள் 8.11.2023

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: –
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் : 7/11/2023 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் Prior to 14.05hrs | Time to : நேரம் வரை –
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 8.11.2023 | Time நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD vol II | Time நேரம் 02.00hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Approximately 1km south east
   Beat Number : முறைக் காவல் எண் – | (b) Address : முகவரி O/o the District officer, Tamilnadu Fire & Rescue services, Tiruppur district.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Niraimathi | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Chandramohan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 40 yrs | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – | Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation : தொழில் District Inspection cell officer | (g) Address : முகவரி O/o. District Inspection cell, Coimbatore collectorate campus, coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. R. Appash, District officer, O/o the District officer, Tamilnadu Fire & Rescue services, Tiruppur district
   2. S. Vivekraj. Assistant, O/o. the District officer, Tamilnadu Fire & Rescue Services, Tiruppur district.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet herewith enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............—...............................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 8/11/23 | A. [signature] 08-11-2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
8/11/2023

Name: பெயர் A. T. Jaikumar
Rank: நிலை ......................No. எண் ..........
Deputy Supdt. of Police,
V&AC, The Nilgiris,
FAC Tiruppur

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 8/2023/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 08.11.2023ம் தேதி 02.00 மணிக்கு நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மற்றும் திருப்பூர் முழு கூடுதல் பொறுப்பு துணை காவல் கண்காணிப்பாளர் A.T.ஜெய் குமார் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தின் ஆய்வுக்குழு அலுவலர் திருமதி. R.நிறைமதி அவர்கள் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரின் விபரம் பின் வருமாறு. அனுப்புநர் R.நிறைமதி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயமுத்தூர். பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி, முழு கூடுதல் பொறுப்பு, திருப்பூர். ந.க.எண். 462/2023/ஐ1, நாள்.08.11.2023 ஐயா பொருள்: திடீர் தணிக்கை - மாவட்ட அலுவலர் அலுவலகம், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருப்பூர் மாவட்டம் - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நேற்று 07.11.2023-ம் தேதி மதியம் சுமார் 14.05 மணி அளவில் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் - அவினாசி ரோட்டில் கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ள திருப்பூர் வடக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய அலுவலக வளாக கட்டிடத்தில் முதல் தளத்தில் அமைந்துள்ள திருப்பூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி அலுவலகத்தில் பணிபுரியும் மாவட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்கள் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டாசு உரிமம் வழங்குவதற்கும் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு தீயணைப்பு உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தலுக்காக தனது கட்டுப்பாட்டில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய அலுவலகங்கள் மூலமாகவும், மற்றும் நேரடியாகவும் கையூட்டாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் நானும், திரு.A.T.ஜெய்குமார், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நீலகிரி, முழு கூடுதல் பொறுப்பு, திருப்பூர் மற்றும் காவல் குழுவினருடன் மேற்படி அலுவலகத்தில் திடீர்

தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது மாவட்ட அலுவலர் அலுவலகத்தில் ஆ1 இருக்கை உதவியாளராக பணிபுரியும் திரு.S.விவேக்ராஜ் என்பவரது மேஜையில் இடதுபுற மேல் டிராயரில் வெள்ளை நிற கவரில் இருந்த 40 எண்ணிக்கையிலான 500 ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.20,000/- கவருடன் இருந்தது. இது குறித்து திரு.S.விவேக்ராஜ் அவர்களிடம் விபரம் கேட்டபோது சரியான முகாந்திரம் எதுவும் கூறாததால் மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்று விசாரணைக்காக கவருடன் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது மேஜையின் இடதுபுறத்தில் கீழ் வைத்திருந்த சோல்டர் பேக்கிலிருந்து ரூ.10,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் சோதனையின் போது தரைதளத்தில் போர்ட்டிகோவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாவட்ட அலுவலரின் பொலீரோ வாகன எண்.TN 24 G 0783 சோதனை செய்த போது பணம் 5 கவர்களில் தனித்தனியாக மடிக்கப்பட்டு டேஸ்போர்டில் வைக்கப்பட்டிருந்தது. அதில் முதல் காக்கிநிற கவரை திறந்து அதிலிருந்த 500 ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்த்த போது 40 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.20,000/- இருந்தது. இரண்டாவது காக்கிநிற கவரை திறந்து அதிலிருந்த 500 ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்த்ததில் அதில் 80 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.40,000/- இருந்தது. மூன்றாவது வெள்ளைநிற கவரை திறந்து அதிலிருந்த 500 ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்த்ததில் அதில் 51 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.25,500/- இருந்தது. நான்காவது வெள்ளைநிற கவரை திறந்து அதிலிருந்த 500 ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்த்ததில் அதில் 59 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.29,500/- இருந்தது. ஐந்தாவது காக்கிநிற கவரை திறந்து அதிலிருந்த 500 ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்த்ததில் அதில் 100 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.50,000/- இருந்தது. மேற்படி 5 கவர்களிலிருந்த மொத்தப்பணம் ரூ.1,65,000/- குறித்து திரு.அப்பாஸ் அவர்களிடம் விபரம் கேட்டபோது சரியான முகாந்திரம் எதுவும் கூறாததால் மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்று விசாரணைக்காக மேற்படி 5 கவர்களுடன் பணம் ரூ.1,65,000/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது மாவட்ட அலுவலர் திரு.R.அப்பாஸ் மற்றும் உதவியாளர் திரு.S.விவேக்ராஜ் ஆகியோரிடமிருந்து மொத்த பணம் ரூ.1,95,000/- (ரூபாய் ஒரு லட்சத்து

தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) கைப்பற்றப்பட்டது. நேற்று 07.11.2023ம் தேதி மதியம் 14.05 மணி முதல் 23.45 மணி வரை நடைபெற்ற திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,95,000/-, 6 கவர்கள், 1) மாவட்ட அலுவலக வருகைபதிவேடு 2023, 2) காலதாமத வருகைப்பதிவேடு -ஆ2 இருக்கை 2023, 3) NOC பட்டாசு பதிவேடு, 4) தடையின்மை சான்று பதிவேடு (NOC), 5) தீ உரிமம் பதிவேடு மற்றும் திடீர் தணிக்கை நடவடிக்கை ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxx நிறைமதி, 8/11/23 ICO, Coimbatore. Sir, Received the complaint and registered a case in Tiruppur V&AC Cr.No.8/2023/AC/TPR U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018 on 08.11.2023 at 02.00 hrs. Sd xxxxxx A.T.Jai Kumar, 08.11.23 DSP, V&AC, NI, FAC TPR. முதல் தகவல் அறிக்கையின் அசலுடன், புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள் ஆகியவைகள் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்களுக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

08.11.2023